# மாநகராட்சி மன்ற அதிகாரிகளை தாக்கினர் நான்கு வியாபாரிகள் கைது

கோலாலம்பூர், மார்ச் 8- அமலாக்க கண்காணிப்பு நடவடிக்கைகளில் ஈடுபட்டிருந்த கோலாலம்பூர் மாநகர மன்றத்தின் அதிகாரிகளை தாக்கி காயப்படுத்திய குற்றங்களின் பேரில் ஒரு பெண் உட்பட நான்கு பேர் கைது செய்யப்பட்டனர்.

குற்றவியல் சட்டத்தின் இரண்டு வெவ்வேறு பிரிவுகளின் கீழ் கைது செய்யப்பட்ட அவர்கள் தடுத்து வைக்கப்பட்டனர் என்று டாங் வாங்கி மாவட்ட காவல் துறை தலைவர் சுலிஸ்மி தெரிவித்தார்.

நேற்று முன் தினம் காலை 11.30 மணியளவில் லோரோங் பெந்தேங் எனும் இடத்தில் அதிகாரிகள் கண்காணிப்பு நடவடிக்கைகளில் ஈடுபட்டிருந்தனர். அப்போது அங்கு முறையான ஆவணமின்றி ஒரு பெண் உணவு பொருட்களை விற்றுக் கொண்டிருந்தார்.

போக்குவரத்துக்கு இடையூறாக அவரது வாகனம் இருந்தது. அதை அகற்றும்படி அதிகாரிகள் கேட்டுக் கொண்டனர். அப்போது ஆத்திரம் அடைந்த அந்த பெண் திடீரென்று ஓர் அதிகாரியை தாக்க தொடங்கினார். இதனை அடுத்து கைது செய்யப்பட்டார்.

அதே சமயத்தில் நேற்று முன் தினம் இரவு 10 மணியளவில் மஸ்ஜிட் இந்தியாவில் ரம்லான் வியாபார சந்தையை கண்காணிக்க சென்ற அதிகாரிகளுடன் அங்கு இருந்த சில வணிகர்கள் வாக்கு வாதத்தில் ஈடுபட்டனர்.

மேலும் தகாத வார்த்தைகளால் திட்டியதுடன் தாக்கவும் செய்தனர். இது தொடர்பாக மூன்று பேர் கைது செய்யப்பட்டனர். அவர்களும் தடுத்து வைக்கப்பட்டனர்.

அரசாங்க அதிகாரிகளின் பணிகளுக்கு இடையூறாக இருந்தனர் என்பதற்காக குற்றவியல் சட்டம் 186 விதி மற்றும் தாக்கி காயப்படுத்தியதற்காக குற்றவியல் சட்டம் செக்ஷன் 323 ஆகிய விதிகளின் கீழ் அவர்களிடம் விசாரணை நடத்தப்படுகிறது என்றும் சுலிஸ்மி தெரிவித்தார்.